FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | மனைப்பொருளியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 1 - 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய விடைத்தாளில் (X) இடுவதன் மூலம் காட்டுக.

01) பின்வருவன வீட்டை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தும் கோடுகளின் மூலம் வெளிக்காட்டப்படும் சில இயல்புகள் ஆகும்.

* உறுதித் தன்மை / உறுதிப்பாடு
* அமைதியான இயல்பு
* நெகிழ்தகவு
* நம்பிக்கையான தன்மை
* சந்தம்

இவை வெளிக்காட்டப்படுவது

(1) நிலைக்குத்துக் கோடுகள், கிடையான கோடுகள் ஆகியவற்றின் மூலம்
(2) மூலைவிட்டக் கோடுகள், வளைகோடுகள் ஆகியவற்றின் மூலம்
(3) நிலைக்குத்துக் கோடுகள், மூலைவிட்டக் கோடுகள், ஆகியவற்றின் மூலம்
(4) கிடையான கோடுகள், வளைகோடுகள் ஆகியவற்றின் மூலம்
(5) நிலைக்குத்துக் கோடுகள், வளைகோடுகள் ஆகியவற்றின் மூலம்

agaram.lk

02) பின்வருவன பிரதான போசணைப் பொருள்களின் சில தொழில்களாகும்.

A - இழைய உருவாக்கத்தில் உதவுகின்றது.
B - உடலுக்கு சக்தியை வழங்குகின்றது.
C - உடல் வெப்பநிலையைப் பேணுகின்றது.
D - உடலில் புரத சிக்கனத் தாக்கச் செயலில் உதவுகின்றது.
E - நீர்ப்பீடனத்தை வழங்கும் ஆற்றல் உள்ளது.

மேற்குறித்தவற்றுள் காபோவைதரேற்றுக்களின் தொழில்கள்

(1) A, B ஆகியன
(2) A, C ஆகியன
(3) B, D ஆகியன
(4) C, E ஆகியன
(5) D, E ஆகியன

03) படுக்கையறைக்கு வர்ணம் தீட்டுவதற்கு மிக உகந்த நிறங்கள்

(1) இளஞ்சூடான, பிரகாசமான நிறங்கள்
(2) மென்னிற, மங்கலான நிறங்கள்
(3) குளிர்ச்சியான, மென்நிறங்கள்
(4) இளஞ்சூடான, கடும் நிறங்கள்
(5) குளிர்ச்சியான பிரகாசமான நிறங்கள்



Scanned with CamScanner

04) சிபார்சு செய்யப்பட்ட உணவு அளவுகள் 2007 (Recommended Dieatry Allowance 2007) அட்டவணை தொடர்பாக மாணவர் கூட்டம் ஒன்றினால் தரப்பட்ட சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முன்பிள்ளைப் பருவத்தில் ஆண், பெண் ஆகிய இருபாற் பிள்ளைகளுக்கும் போசணைத் தேவைகள் ஒரே அளவினதாகும்.

B - கர்ப்ப காலத்திலும் பாலூட்டும் காலத்திலும் இரும்பு தேவைகள் ஒரே அளவினதாகும்.

C - வயோதிப வயதில் கல்சியத்தின் தேவை குறைவடையும்.

D - கர்ப்ப காலத்தில் விற்றமின் *A* இன் தேவை அதிகரிக்கும்.

E - வயது வந்த (*Adult*) பெண்களுக்கும் ஆண்களுக்கும் புரதத் தேவை ஒரே அளவினதாகும்.

இவற்றுள் சரியான கூற்றுக்கள்

(1) A, B, D ஆகியன (2) A, C, D ஆகியன (3) A, C, E ஆகியன
(4) B, C, D ஆகியன (5) B, D, E ஆகியன

05) உடலில் நேர் நைதரசன் சமனிலையை எடுத்துக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
(1) கடுமையான எரிவு
(2) நோயொன்றிலிருந்து உடல்நிலை தேறும் காலம்
(3) குருதிப் பெருக்கு
(4) அளவுக்கு மிஞ்சிய வாந்தி
(5) தீவிரமான வயிற்றோட்டம்

06) பூப்படைய ஆரம்பிக்கும் காலத்துடன் பெண் இலிங்க ஓமோன் உற்பத்தி செய்யப்படுவது
(1) சூலகங்கள், கபச்சுரப்பி ஆகியவற்றினால்
(2) சூலகங்கள், கருப்பை ஆகியவற்றினால்
(3) கருப்பை, அதிரினற் சுரப்பி ஆகியவற்றினால்
(4) சூலகங்கள், அதிரினற் சுரப்பி ஆகியவற்றினால்
(5) கருப்பை, கபச்சுரப்பி ஆகியவற்றினால்

07) பின்வருவன பல்வேறு வீடுகளில் அவதானிக்கப்பட்ட சில கட்டமைப்பு இயல்புகள் ஆகும்.

A - அறைகளில் உயரங்கூடிய யன்னல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை.

B - படிக்கட்டின் கீழுள்ள இடத்தை வாசிப்பு அறையாக பயன்படுத்தல்

C - படுக்கை அறையில் சுவர் சிற்றலுமாரிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை

D - ஊர்திச்சாலை (*garage*) உம் விறாந்தையும் மடிக்கக்கூடிய கதவினால் பிரிக்கப்பட்டுள்ளமை

E - யன்னல்களும் கதவுகளும் எதிர்ச் சுவரில் அமைந்துள்ளமை

இவற்றிலிருந்து நெகிழும் தன்மையைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள்

(1) A, B (2) A,C (3) B,D (4) C, D (5) D, E

08) பின்வரும் உணவுப் பொருள்களுள் அதிக சதவீதத்தில் புரதத்தை உடையது
(1) மீன் (2) கருவாடு (3) நிலக்கடலை
(4) பருப்பு (5) சமன் (*Salmon*)

09) நொதியக் கபிலநிறமாதலின் போது உண்டாகும் சேர்வை
(1) பீனோல் (2) கீற்றோன் (3) பொலிபீனோல் ஒக்சிடேசு
(4) அல்டிகைட் (5) பொலிபீனோல்

10) இடியப்பம் தயாரிக்கும் போது வெப்பம் ஊடுகடத்தப்படுவது
(1) உடன்காவுகையின் மூலம் ஆகும்.
(2) உடன்காவுகையினாலும் கடத்தலினாலும் ஆகும்.
(3) கடத்தலினாலும் கதிர்ப்பினாலும் ஆகும்.
(4) உடன்காவுகையினாலும் கதிர்ப்பினாலும் ஆகும்.
(5) கடத்தல், உடன்காவுகை, கதிர்ப்பு ஆகியவற்றினால் ஆகும்.



agaram.lk
Scanned with CamScanner

11) பின்வருவன உணவு நற்காப்பில் சம்பந்தப்படும் விடயங்கள் தொடர்பாக வினவப்பட்ட போது மாணவர் குழு ஒன்றினால் தரப்பட்ட சில விடயங்கள் ஆகும்.

A - ஊடகத்தின் $pH$ பெறுமானம் அதிகரித்தல்

B - ஊடகத்தின் செறிவு அதிகரித்தல்

C - புறப்பிரசாரணம் நடைபெறல்

D - ஊடகத்தின் $pH$ பெறுமானம் குறைதல்

E - நற்காப்பு பேணும் பொருள்களைப் பயன்படுத்தல்

இவற்றுள் ஊறுகாய் தயாரிப்பு செயன்முறையில் சம்பந்தப்படும் விடயங்கள்

(1) A, B, C ஆகியன
(2) A, C ஆகியன
(3) A, C, E ஆகியன
(4) B, D ஆகியன
(5) C, D, E ஆகியன

12) துணிகளை உற்பத்தி செய்யும்போது பயன்படுத்தப்படும் நார்களின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - செலுலோசைக் கொண்டுள்ளது.

B - ஈரமாகும் போது நார்களின் பலம் குறைவடையும்

C - நிறையூட்டப்படக்கூடியது

D - அழுத்தமான மேற்பரப்பு விரைவாக அழுக்காவதைத் (Solling) தடுக்கும்

E - கழுவும் போது கரடுமுரடாக இருக்கும்.

இந்த இயல்புகளில் பட்டு நாருக்குப் பொருத்தமானது

(1) A, C, D (2) B, C, D (3) A, E (4) B, C, E (5) B, E

13) பிள்ளையொன்று ஐந்து வயதைப் பூர்த்தி செய்ததும் வழங்கவேண்டிய வக்சீன்

(1) JE வக்சீன்
(2) இருகூட்டு CDT வக்சீன்
(3) MMR வக்சீன்
(4) வாய்வழி போலியோ வக்சின்
(5) ஐவலுவுள்ள (பென்ரா வேலன்ற்) வக்சீன்

agaram.lk

14) பொருத்தப்பாடின்மை என்பது, பிள்ளைகள்

(1) பெற்றோருக்கு எதிராக தவறாக நடந்து கொள்ளல்
(2) சமவயது குழு ஏற்றுக் கொள்ளாத விதத்தில் நடந்து கொள்ளல்
(3) தண்டனைக்குரியதான நடத்தைகளில் ஈடுபடல்
(4) சமூக விழுமியங்களுக்கு முரணாக நடந்து கொள்ளல்
(5) நெறிப்பிறழ்வாக நடந்து கொள்ளல்

15) மாணவரொருவனால் புரதச் சமிபாடு தொடர்பாக குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - உதரச் சாற்றின் $pH$ பெறுமானம் ஏறத்தாழ 4.5 ஆகும்.

B - முன்சிறுகுடலில் பெப்சினால் புரதம் பெப்ரோன்களாக மாற்றப்படும்.

C - பெப்ரிடேஸின் மூலம் இருப்பெப்ரைட்டுக்கள் அமினோ அமிலங்களாக மாற்றப்படுகின்றன.

D - செயற்படாத திரிப்சினோஜன் ஏந்திரோகைனேசினால் செயற்படக்கூடிய திரிப்சினாக மாற்றப்படுகின்றது.

E - பெருங்குடலில் இரு பெப்ரைட்டுக்கள் அமினோ அமிலமாக மாற்றப்படுகின்றன.

இவற்றுள் சரியான கூற்றுக்கள்

(1) A, C ஆகியன
(2) A, C, E ஆகியன
(3) B, C, D ஆகியன
(4) B, D, E ஆகியன
(5) C, D ஆகியன



Scanned with CamScanner

16) உக்கிரமான குறை போசணையுள்ள பிள்ளைகளினால் காட்டப்படும் ஒரு பிரதான இயல்பு

(1) உடல் ஊருகுதல் (*Wasting*)
(2) உயிர்ப்பில்லாத மந்தமான இயல்பு
(3) வெளிறல்
(4) குறள் தன்மை
(5) தோல் வரட்சி

17) 'இழுத்து நேர்த்தியாக்கல்' என்பது துணிகளுக்கு வழங்கப்படும் நேர்த்தியாகும். இச்செயன்முறையின் போது

(1) துணியின் பளபளப்பு அதிகரிக்கும்
(2) துணியின் பலம் அதிகரிக்கும்
(3) துணியின் அகலம் ஒரேசீராக இருக்கும்
(4) துணிக்கு சாயங்களை உறிஞ்சும் தன்மை அதிகமாகும்
(5) துணியின் மேற்பரப்பு காட்டுருவானது வெளித்தள்ளப்பட்டுக் காணப்படும்.

18) ✱ விரைவில் களைப்படையும்.
✱ இதயத்துடிப்பு வேகம் அதிகரித்தல்.
✱ இலகுவில் நோய்க்கு ஆளாதல்.
✱ உடல் வெளிருதலும் கண்கள் வெளிரும் தன்மையும்.

மேலே தரப்பட்ட அறிகுறிகள் எச்சத்துக் குறைபாட்டால் ஏற்படுகின்றன?

(1) விற்றமின் *A*
(2) விற்றமின் *C*
(3) இரும்பு
(4) காபோவைதரேற்று
(5) கொழுப்பு குறைபாடு

19) பின்வருவன பேஸ்ரி பாஸ்கட் (*Pastry basket*) தயாரிப்பதற்காக பேஸ்ரி தயாரித்தல் தொடர்பாக மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டபோது பெறப்பட்ட சில விடயங்களாகும்.

A - கொழுப்பும் மாவும் சம விகிதத்தில் எடுக்கப்பட வேண்டும்.
B - முதலில் கொழுப்பும் மாவும் விரல் நுனியினால் கலக்கப்பட வேண்டும்.
C - கலவையைத் தயாரிக்கும் போது சுமாராக வெதுவெதுப்புள்ள அதிக சூடில்லாத நீர் பயன்படுத்த வேண்டும்.
D - கலவைக்கு மதுவம் சேர்க்கப்பட வேண்டும்.
E - கலவைக்கு முட்டைகள் சேர்க்கப்பட வேண்டும்.

இவற்றுள் சரியான விடை

(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, E ஆகியன மாத்திரம்
(5) C, D ஆகியன மாத்திரம்

agaram.lk

20) உணவு சமிபாடடைந்த பின் குருதியினால் நேரடியாக அகத்துறிஞ்சப்படாதது

(1) குளுக்கோசு
(2) அமினோ அமிலங்கள்
(3) குறுகிய சங்கிலி கொழுப்பமிலங்கள்
(4) நீண்ட சங்கிலி கொழுப்பமிலங்கள்
(5) பிரற்றோசு

21) பாலைத் தயாரிக்கும் செயன்முறையில் பொறுப்பான நுண்ணங்கி இனம்

(1) அசற்றோபக்ரர் அசிற்றை (*Acetobacter aceti*)
(2) பெனிசிலியம் ரொக்கிபோட் (*Penicillium roquefort*)
(3) லக்ரோபசிலஸ் பல்காரிகஸ் (*Lactobacillus bulgaricus*)
(4) சக்குரோமைசிஸ் செரிவிசே (*Saccharomyces cerevisiae*)
(5) ஸ்ரெப்ரோ கொக்கஸ் லக்ரிஸ் (*Streptococcus lactis*)

22) பின்வருவன உணவைப் பொதி செய்தலில் பயன்படுத்தப்படும் பொருள்களின் சிறப்பியல்புகள் ஆகும்.

A - இலகுவாக கிருமியழிக்கக்கூடியது
B - இலகுவாக மூடித்தாளிட (*Seaked*) முடியும்.
C - அடராக்கம் (*laminating*) அதன் வலுவை அதிகரிக்கும்
D - மீள்சுழற்சி செய்யப்படக்கூடியது
E - ஒளியினால் பாதிக்கப்படமாட்டாது

பின்வரும் சிறப்பியல்புகளில் கண்ணாடியைப் பொதி செய்யும் பொருளாகப் பயன்படுத்துவதற்குரியது.

(1) A, B, D
(2) B, C, D
(3) A, C, E
(4) B, D, E
(5) C, D, E



Scanned with CamScanner

23) உடற்பகுதியின் அடிப்படை (*bodice block*) மாதிரியுருவை நிர்மாணித்தலில் முற்பக்க இடுப்பு அளவீடுகள் கணிக்கப்படுவது

(1) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{2} + 1.5\ cm\right) \div 2$

(2) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{4} + 1.5\ cm\right) \div 2$

(3) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{2}\right) \div 2$

(4) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{4} + 5\ cm\right) \div 2$

(5) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{2} + 5\ cm\right) \div 2$

24) பிள்ளை விருத்தி தொடர்பான சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மிகச் சுறுசுறுப்பான காலம்

B - எலும்பின் நீளமும் தடிப்பும் அதிகரித்தல்

C - தலை உடல் நீளத்தின் $\frac{1}{4}$ பங்கு ஆகும்.

D - மன எழுச்சி வெளிக்காட்டல்களை கட்டுப்படுத்த முயற்சித்தல்

E - சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளில் இலகுவாக ஈடுபடல்

இவற்றுள் பின்பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் விருத்தியுடன் தொடர்புபட்டவை

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) C, D, E (5) A, D, E

25) நுண்ணலைக் கனலடுப்பில் சமையல் செய்யும் போது உணவில் சிறிதளவு நீர் இருத்தல் அவசியமாகும். மேற்குறித்த கூற்றுக்கு காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) மின்காந்த இயந்திரம் (*Magnetron*) தொழிற்படுவதற்கு நீர் தேவையாகும்.

(2) உலர் உணவுகளினூடாக நுண்ணலைகள் கடத்தப்படுவதில்லை.

(3) வெப்பத்தை தோற்றுவிப்பதற்கு நீர் மூலக்கூறுகள் தேவை.

(4) மின் சக்தியை நுண்ணலைகளாக மாற்றுவதற்கு நீர் அவசியமாகும்.

(5) கதிர்வீசல் விளைவைத் தடுப்பதற்கு நீர் தேவை.

26) மலர் ஒழுங்கு தொடர்பாக மாணவர்கள் முன்வைத்த சில விடயங்களுள் சரியானது எது?

(1) மலர் ஒழுங்கு செய்வதற்கு உயரம் குறைந்த பூந்தாளிகள் தெரிவு செய்யப்படுகின்றன.

(2) மலர் ஒழுங்கில் மேலே சிறிய மலர்கள் இடப்படுகின்றன.

(3) நறுமணமற்ற பூக்கள் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன.

(4) உலர்ந்த மலர்கள் மலர் ஒழுங்கில் கீழே பயன்படுத்தப்படுகின்றன.

(5) இலைகளும் கிளைகளும் மலர் ஒழுங்கின் அடியில் பயன்படுத்தப்படுகின்றன.

27) உடலில் தைரொக்சின் ஓமோன் தொகுப்பில் தொடர்பு கொண்டுள்ள போசணைப் பொருள் எது?

(1) அயடீன் (2) கல்சியம் (3) பொசுபரஸ் (4) மக்னீசியம் (5) செம்பு

28) உடலில் தசைப்பதன் (*Muscle tone*) கட்டுப்பாட்டுடன் தொடர்புபட்ட கனிப்பொருள்

(1) சோடியம் (2) அயடீன் (3) கல்சியம் (4) நாகம் (5) மக்னீசியம்

29) சில நோய்கள் தொடர்பாக மாணவர்களால் முன் வைக்கப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - உணவு வேளையில் நார் உணவுப் பொருள்கள் சேர்க்கப்பட வேண்டும்.

B - மூன்று பிரதான வேளை உணவிற்கு பதிலாக சிறு உணவு வேளைகள் பலவற்றை எடுத்தல் விரும்பத்தக்கதாகும்.

C - சிறுநீரகங்கள் மாத்திரம் பாதிக்கப்படும்.

D - நிறைகுறைதலும் தாகமும் ஆரம்ப நோய் அறிகுறிகளாகும்.

E - பாரம்பரிய செல்வாக்கினைக் கொண்ட நோய்.

இவற்றுள் நீரிழிவுடன் தொடர்புள்ள விடயங்கள்

(1) A, B, C என்பன மாத்திரம் (2) A, C, D என்பன மாத்திரம்

(3) A, C, E என்பன மாத்திரம் (4) A, B, C, D என்பன மாத்திரம்

(5) A, B, D, E என்பன மாத்திரம்



agaram.lk

Scanned with CamScanner

30) பின்வருவனவற்றுள் எது கூட்டுப்புரதம்?
(1) மயோசின்
(2) குளுட்டன்
(3) ஜெலற்றீன்
(4) இலிப்போபுரதம்
(5) ஓவோவிற்றாலின்

31) அதி உயர் வெப்பம், நற்காப்பு பொருட்கள் சேர்த்தல் ஆகிய நுட்பங்களைப் பிரதானமாகப் பயன்படுத்தி பதப்படுத்தப்பட்டு பேணப்படும் உணவுகள் முறையே
(1) தக்காளி சட்னி, ஒடுக்கிய பால் (ரின்பால்)
(2) தயிர், கருவாடு
(3) விளாம்பழ ஜாம், மலே அச்சாறு
(4) பால்மா, உலர்த்திய பலாக்காய்
(5) கிருமியழித்த பால், மாம்பழ கோடியல்

32) உடலில் நடைபெறும் உட்சேபச் (*anabotic*) செயன்முறைக்கு உதாரணம்
(1) ஓமோன்களின் தொகுப்பு
(2) சக்தி உற்பத்தி
(3) சிக்கலான போசணைப் பொருள்கள் எளிய போசணைப் பொருள்களாக மாற்றீடு செய்தல்
(4) யூரியாவினதும், யூரிக்கமிலத்தினதும் தொகுப்பு
(5) சுவாசச் செயன்முறை


33) பாசிப்பயறு சேர்த்து பாற்சோற்றில் புரதம் கூடுதலாக உள்ளது. இவ் உணவுப் பொருளின் மூலம் கிடைக்கும் இரண்டு அமினோ அமிலங்கள்
(1) லைசின், லியூசின்
(2) லியூசின், வலைன்
(3) திரிப்ரோபான், பினைல் அலனின்
(4) லைசின், மெதியோனின்
(5) ஐசோலியூசின், மெதியோனின்

34) தைக்கா விளிம்புகளின் பொருத்து மற்றும் கழுத்து நேர்த்தியில் பயன்படுத்துவன முறையே பின்வருவனவற்றுள் எது?
(1) வெட்டுக்குத்து, மீன்முள்ளுத் தையல், கம்பளித் தையல்
(2) அலங்கார நுண்நாடா, வெட்டுக்குத்து, மீன்முள்ளுத் தையல்
(3) கம்பளி தையல், உருவ முகப்புத் துண்டு
(4) அலங்கார நுண்நாடா, விளிம்பு மூடித் தையல்
(5) உருவ முகப்பு துண்டு, கம்பளித் தையல்

agaram.lk

35) புடைவை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் அடிப்படை நெசவும், அலங்கார நெசவும் ஆக இருப்பது
(1) பாய் நெசவு, பாவுவிலா நெசவு
(2) லினோ நெசவு, யக்காட்டு நெசவு
(3) பாய் நெசவு, லினோ நெசவு
(4) ஊடைவிலா நெசவு, சரிவுக்கோட்டு நெசவு
(5) லினோ நெசவு, டொபி நெசவு

36) படத்தில் காட்டப்பட்டுள்ள அலங்காரத் தையலின் பெயர் யாது?
(1) பிரான்சிய முடிச்சு
(2) அடுக்கு நாணயவுருத் தையல்
(3) நீள் குறுந் தையல்
(4) அடைப்பு தையல்
(5) மீன் முள்ளுத்தையல்



37) இரண்டு அத்தியாவசியமான அமினோ அமிலங்கள்
(1) கிளைசீனும் இலைசீனும்
(2) திரிப்ரோபனும் புரோலீனும்
(3) இலைசீனும் மெதியோனினும்
(4) திரான்சிஸ்கொழுப்பமிலங்கள்
(5) நிரம்பிய கொழுப்பமிலங்கள்



Scanned with CamScanner

38) பின்வருவனவற்றுள் கொழுமையான நபர் ஒருவருக்கு மிக உகந்த உணவு வேளையாக இருக்கக் கூடியது.
(1) தவிட்டரிசிச் சோறு, பீர்க்கங்காய் கறி, சுவையூண் மீன் கறி, வெண்டைக்காய்கறி, தக்காளி சலட்
(2) தவிட்டரிசிச் சோறு, பருப்புக் கறி, சுவையூண் இறைச்சிக்கறி, சாம்பல் வாழைக்காய் பொரியல், வல்லாரைச் சலாது
(3) புழுங்கல் அரிசிச் சோறு, புடலங்காய்க்கறி, சுவையூண் கருவாட்டுக்கறி, மஞ்சட் பூசணிக்கறி, கரட் சலாட்
(4) புழுங்கல் அரிசிச் சோறு, மீன் வெள்ளைக்கறி, போஞ்சிக்கறி, சிறகவரை வதக்கல் (*tempered*) பீற்றூட் சலாது
(5) புழுங்கல் அரிசிச் சோறு, கோவாக் கறி, உருளைக்கிழங்குகறி, சோயாகறி, பொன்னாங்கானி வறை

39) குடலுக்குரிய பற்றீரியாவினால் தொகுக்கப்படும் விற்றமின் பின்வருவனவற்றுள் எது?
(1) விற்றமின் A (2) விற்றமின் C (3) விற்றமின் D
(4) விற்றமின் E (5) விற்றமின் K

40) ஜெலற்றினாக்கம் நடைபெறுவது
(1) முட்டை வெள்ளைக்கருவை அடிக்கும் போது
(2) ஜாம் தயாரித்தலின் போது
(3) உருளைக்கிழங்குகளை அவிக்கும் போது
(4) மாஸ்மலோ புடிங் தயாரிக்கும் போது
(5) மீன் மெல்லவியலின் போது

41) கர்ப்பிணிப் பருவகாலம் எனப் பொதுவாகக் கருதப்படுவது
(1) 28 வாரங்கள் (2) 32 வாரங்கள் (3) 36 வாரங்கள்
(4) 40 வாரங்கள் (5) 44 வாரங்கள்

agaram.lk

42) தாய்ப்பால் உற்பத்தியைத் தூண்டும் ஓமோன்கள்
(1) ஒக்சிரோசின், புரோலக்ரின் ஆகியன
(2) புரோலக்ரின், ஈஸ்ரஜின் ஆகியன
(3) புரஜஸ்ரரோன் , ஒக்சிரோசின் ஆகியன
(4) ஈஸ்ரஜின், புரஜஸ்ரரோன் ஆகியன
(5) புரோலக்ரின், புரஜஸ்ரரோன் ஆகியன

43) புரத அனுசேபத்தால் அமினோ கூட்டமாகவும் காபொட்சைல் கூட்டமாகவும் உடைக்கப்படுவது
(1) ஈரலில் ஆகும் (2) மண்ணீரலில் ஆகும் (3) இரப்பையில் ஆகும்
(4) சதையியில் ஆகும் (5) முன்சிறுகுடலில் ஆகும்

44) இறைச்சி, மீன், காய்கறிகளின் மெல்லவியல் என்பது
(1) உயர்ந்த வெப்பநிலையில் மூடி திறந்த வெப்பநிலையில் குறுகிய நேரம் சமைத்தல்
(2) உயர்ந்த வெப்பநிலையில் மூடிய நிலையில் குறுகிய நேரம் சமைத்தல்
(3) தாழ்ந்த வெப்பநிலையில் மூடித்திறந்த நிலையில் நீண்ட நேரம் சமைத்தல்
(4) தாழ்ந்த வெப்பநிலையில் மூடப்பட்ட நிலையில் குறுகிய நேரம் சமைத்தல்
(5) தாழ்ந்த வெப்பநிலையில் மூடப்பட்ட நிலையில் நீண்ட நேரம் சமைத்தல்

45) மின் அழுத்தியைப் பயன்படுத்தி துணிகளை அழுத்தும் போது பின்பற்ற வேண்டிய படிமுறை
(1) காவிலி ஒன்றின் மீது நிலைக்குத்தாக அழுத்தியை வைத்தல்
(2) கடத்தி ஒன்றின் மீது அழுத்தியை நிலைக்குத்தாக வைத்தல்
(3) காவிலி ஒன்றின் மீது அழுத்தியை கிடையாக வைத்தல்
(4) கடத்தி ஒன்றின் மீது அழுத்தியை கிடையாக வைத்தல்
(5) எல்லாத் துணிகளையும் தாழ்ந்த வெப்பநிலையில் அழுத்துதல்



Scanned with CamScanner

46) தைக்கும்போது ஊசியைச் சுற்றி நூலைப் பின்னும் விதத்தில் சமமான தன்மையைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எவ் இரண்டு அலங்காரத் தையல் முறைகள் ஆகும்?
   (1) அடுக்கு நாணயவுருத் தையல், சங்கிலித் தையல்
   (2) பிரான்சிய முடிச்சு, அடுக்கு நாணயவுருத் தையல்
   (3) சங்கிலித் தையல், பிரான்சிய முடிச்சு
   (4) பிரான்சிய முடிச்சு, தனிச் சங்கிலித் தையல்
   (5) தனிச் சங்கிலித் தையல், அடுக்கு நாணயவுருத் தையல்


47) பின்வருவன பதினைந்து வயதுள்ள குமாரிடம் காணப்படும் சில நடத்தைகள் ஆகும்.
   A - சுயாதீனமான வேலைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் காட்டல்
   B - முன்மாதிரியாக இருக்க விரும்புதல்
   C - எதிர்பாலரிடம் சிநேகம் கொள்ள விரும்புதல்
   D - தனிமையாக இருக்க விரும்புதல்
   E - எப்பொழுதும் குடும்ப அங்கத்தவருடன் கோபாவேச நடத்தையைக் காட்டல்
   இவற்றுள் ஆலோசனை பெறவேண்டிய பிரச்சினை நிலைமைகள்
   (1) A, B   (2) B, C   (3) A, D   (4) D, E   (5) B, E

48) மூன்றுமாத வயதுள்ள குழந்தையின் இயல்பு பின்வருவனவற்றுள் எது?
   (1) நாளொன்றுக்கு 22 மணித்தியாலம் அளவில் நித்திரை செய்யும்.
   (2) பாற்பற்கள் இரண்டு மாத்திரம் வெளிப்படும்.
   (3) முண்டத்தையும் அவயங்களையும் ஒப்பிடுகையில் தலை பெரிதாகும்.
   (4) தெரிவினை செயலாக மாத்திரம் சிரிக்கும்.
   (5) முதுகுப் பக்கமாக மாத்திரம் படுக்கும்.

agaram.lk

49) பின்வருவன புடைவை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நார்கள் தொடர்பான சில கூற்றுக்கள் ஆகும்.
   A - வளியைப் பற்றிப் பிடித்து வைக்கக்கூடியவாறு நாரின் கட்டமைப்பு ஆக்கப்பட்டுள்ளது.
   B - நனைந்த நிலையில் பலமுள்ள நாராக இருக்கும்
   C - நார் முறுக்கான நிலையில் இருத்தல்
   D - நார் ஒளிபுகவிடக் கூடியதாக இருத்தல்
   E - மினுக்குவதன் மூலம் நாரின் பளபளப்பை அதிகரித்தல்
   இவற்றுள் பருத்தி நாருடன் தொடர்பான கூற்றுக்கள்
   (1) D, B   (2) C, E   (3) A, B, C   (4) A, C, D   (5) B, C, E

50) சில தைத்துப் பூர்த்தியாக்கிய ஆடைகளின் பராமரிப்புச் சுட்டிகளில் பின்வரும் அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளன. (*Symbols*)




A   B   C   D   E

   மேற்குறித்தவற்றுள் 'தட்டையான மேற்பரப்பில் உலர்த்துதல்' 'ஏதேனுமொரு உலர் சலவைக் கருவியைப் பயன்படுத்த முடியும்' என்னும் இரு அறிவுறுத்தல்களையும் முறையே பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளம்
   (1) A, B   (2) B, C   (3) A, D   (4) C, E   (5) A, E



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | மனைப்பொருளியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் முதலாம் வினாவும் வேறு இரண்டு வினாக்களுக்கும், பகுதி II இல் ஐந்தாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

➤ 1 ஆம் வினாவும் வேறு இரண்டு வினாக்களும் உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

01) நாட்டுப்புறத்திற்குரிய வீடொன்றில் 2 படுக்கை அறைகளைக் கொண்ட வீட்டில் 5 அங்கத்தவர் வசிக்கின்றனர். பாடசாலை செல்லும் மகள் ஒருவர் 2 மகன்மார், பெற்றோர் தொழிலுக்குச் செல்வோர் இருப்பினும் உள்ளக அலங்கரிப்பிலும் தம்மைச் சூழவுள்ள சுற்றாடல் நலத்தைப் பேணுவதிலும் கூட அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். இக்குடும்பம் மகிழ்ச்சிகரமான வீட்டுச் சூழலை உருவாக்குவதில் அக்கறை காட்டுகின்றது. தாய் தையல் வேலையில் திறமை கொண்டவர்.

(i) வரவேற்பறையின் மத்தியில் ஓர் அழகான மலர் ஒழுங்கமைப்பை வைத்துள்ளனர். இந்த ஒழுங்கமைப்பிற்கு அவர்கள் பின்பற்றிய கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

(ii) வீட்டு வளங்களை முகாமிப்பது தொடர்பாக இக்குடும்பம் கருத்தில் கொள்ள வேண்டிய படிமுறைகள் யாவை?

(iii) நேர முகாமைத்துவத்தின் போது இக்குடும்பத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய வழிமுறைகள் 4 எழுதுக.

(iv) ஆடை வகைகளை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்படும் தையல்களை பிரதான கூட்டங்களின் கீழ் வகைப்படுத்துக.

(v) வீட்டை அலங்கரிப்பதற்கு திரைச்சீலையை தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை? (25 புள்ளிகள்)

agaram.lk

02) (i) உணவுகளை பொதியிடுவதால் பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கின்றன. அவற்றில் 5 எழுதுக.

(ii) உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் விலையைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

(iii) செயற்கை சுவையூட்டிகளில் உணவின் தரத்தை விருத்தி செய்யும் பொருட்களை எழுதுக.

(iv) உணவைப் பதப்படுத்தலின் போது நொதித்தல், பொங்குதல் என்பவற்றால் ஏற்படும் மாற்றம் யாது? (20 புள்ளிகள்)

03) (i) நார் வலையின் இயல்புகளை அறிவதன் மூலம் துணியை தெரிவு செய்வது இலகுவாகும். மீள் தன்மை, அமிலங்களின் தாக்கம், வலிமை என்பவற்றுக்கு பருத்தி, பட்டு, கம்பளியை உட்படுத்துவதன் மூலம் ஏற்படும் இயல்புகள் இரண்டு எழுதுக.

(ii) அடிப்படை மாதிரியுருவைப் பயன்படுத்தி சேவைக்கான இரவில் கையின் பிற்பக்க உடல் மாதியுருவை நிர்மாணிக்கும் போது வேல்மடிப்பு நீக்கப்படும் விதத்தை வரிப்படங்கள் மூலம் காட்டுக.

(iii) சாரி இரவிக்கை தைக்கும் படிமுறை எழுதுக.

(iv) பின்வரும் நார்களின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை வரைந்து காட்டுக.
பருத்தி, ரேயோன், லினன் (20 புள்ளிகள்)



Scanned with CamScanner

04) (i) சமயலறையின் மின் தொழில் சிக்கன உத்திகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளைக் குறிப்பிடுக.

(ii) நெசவு செய்யாது பின்னல் மூலம் தயாரிக்கப்படும் பொருட்கள் 5 எழுதுக.

(iii) பல்தொழில்பாட்டுத் தளபாடங்களையும், இடத்தைச் சிக்கனப்படுத்தும் மனைத் தளபாடங்களையும் எழுதுக.

(iv) மாதிரி உருவை துணியில் வைத்து வெட்டும் முறையை ஒழுங்காக எழுதுக. (20 புள்ளிகள்)

## பகுதி II

➢ **ஐந்தாம் வினாவும் வேறு மூன்று வினாக்களும் உட்பட நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

05) கிராமம் ஒன்றில் போசணை உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயங்களை மாதத்தில் ஒருமுறை அக்கிராம மக்களுக்கு சுகாதாரப் பகுதியினர் எடுத்துக் கூறுவர். முரளி தரம் 2 இல் கல்வி கற்கும் சுறுசுறுப்பான சமூக இசைவாக்கமும் உள்ள பிள்ளை. அவனின் தேவையை நிறைவேற்றுவதில் பெற்றோர் அக்கறை கொண்டிருந்தனர். முரளியின் தாயார் குழந்தை ஒன்றை பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளார்.

(i) முரளி நல்ல போசணை உடைய பிள்ளையாக இருப்பதற்குரிய காரணிகள் எவை?

(ii) முரளிக்கு பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்கு உணவு தயாரிக்கும் போது கருதவேண்டிய விடயங்கள் யாவை?

(iii) முரளி பிரசித்தி பெற்ற பிள்ளையாக மாற்றுவதற்கு ஏதுவாக உள்ள காரணிகளைத் தருக.

(iv) முரளியின் தாயர் பிணியாய் நிலையம் செல்கின்றார். அதன்மூலம் கிடைக்கும் சேவையை எழுதுக.

(v) கர்ப்பிணி ஒருவரின் ஆரோக்கியமான சுகாதாரப் பழக்கவழக்கங்கள் எவை? (20 புள்ளிகள்)

06) (i) சந்தைப்படுத்தலின் உணவின் தரப் பண்பை உற்பத்தியாளரும் விற்பனையாளரும் கடைப் பிடிக்கின்றனர். நுகர்வோர் பாதுகாப்புக் கருதி செயற்படும் நிறுவனங்கள் 5 தருக.

(ii) இந்நிறுவனங்கள் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு தரமான உணவுகளை கொள்வனவு செய்ய முடிவதற்குரிய காரணம் யாது?

(iii) உணவை கிருமியழிக்கும் செயல்முறையை எழுதுக.

(iv) சமைத்தலின் போது உணவின் போசணை அழியாது எவ்வாறு பாதுகாப்பது? (20 புள்ளிகள்)

07) (i) உடலின் எப்பகுதியில் காபோவைதரேற்று, கொழுப்பு, புரதம் சமிபாடு அடைதல் ஆரம்பமாகிறது?

(ii) சதையற் சாற்றில் காணப்படும் நொதியங்கள் எவை?

(iii) சமிபாட்டு சிக்கல் உடைய ஒருவருக்கான இராவுணவுப் பட்டியல் ஒன்றை எழுதுக.

(iv) மலச்சிக்கல் என்றால் என்ன? (20 புள்ளிகள்)

08) (i) காபோவைதரேற்றை வகைப்படுத்துக.

(ii) கட்டிளமைப் பருவத்தினருக்கான மதிய உணவைத் திட்டமிடுக.

(iii) நீர் திட்டமிட்ட (வினா ii) மதிய உணவுக்கு தெரிவு செய்த ஈற்றுணவு செயன்முறையை விபரிக்க.

(iv) 6 - 7 வயதாகும் பிள்ளையின் மொழி விருத்தியில் தொடர்பாடல் ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. தொடர்பாடல் ஊடகங்களை எழுதுக. (20 புள்ளிகள்)

09) (i) மனையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் எவ்வகையானவை?

(ii) கூட்டுப் பசளை தயாரிக்கும் முறையைக் குறிப்பிடுக.

(iii) மேற்குறித்த முறைகளில் ஒன்று தயாரிக்கும் முறையை எழுதுக. (20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

Term Examination, March - 2016

FWC

| மனைப்பொருளியல் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## மனைப்பொருளியல் - I

01) கிடையான கோடுகள், வளைகோடுகள் ஆகியவற்றின் மூலம்
02) B, D ஆகியன
03) குளிர்ச்சியான, மென்நிறங்கள்
04) A, B, D ஆகியன
05) நோயொன்றிலிருந்து உடல்நிலை தேறும் காலம்
06) சூலகங்கள், கருப்பை ஆகியவற்றினால்
07) B,D
08) கருவாடு
09) பொலிபீனோல்
10) உடன்காவுகையினாலும் கடத்தலினாலும் ஆகும்.
11) C, D, E ஆகியன
12) B, C, D
13) இருகூட்டு CDT வக்சீன்
14) சமூக விழுமியங்களுக்கு முரணாக நடந்து கொள்ளல்
15) C, D ஆகியன
16) உடல் ஊருகுதல் (*Wasting*)
17) துணியின் அகலம் ஒரேசீராக இருக்கும்
18) இரும்புக் குறைபாடு
19) B மாத்திரம்
20) நீண்ட சங்கிலி கொழுப்பமிலங்கள்
21) ஸ்ரெப்ரோ கொக்கஸ் லக்ரிஸ் (*Streptococcus lactis*)
22) A, B, D
23) $\left(\frac{\text{இடுப்பு அளவு } (cm)}{2} + 1.5\ cm\right) \div 2$
24) A, B, D
25) வெப்பத்தை தோற்றுவிப்பதற்கு நீர் மூலக்கூறுகள் தேவை.
26) மலர் ஒழுங்கில் மேலே சிறிய மலர்கள் இடப்படுகின்றன.
27) அயடீன்
28) கல்சியம்
29) A, B, D, E என்பன மாத்திரம்
30) இலிப்போபுரதம்
31) கிருமியழித்த பால், மாம்பழ கோடியல்
32) ஓமோன்களின் தொகுப்பு
33) லைசின், மெதியோனின்
34) கம்பளி தையல், உருவ முகப்புத் துண்டு
35) பாய் நெசவு, லினோ நெசவு
36) நீள்குறுந் தையல்
37) இலைசீனும் மெதியோனினும்
38) தவிட்டரிசிச் சோறு, பீர்க்கங்காய் கறி, சுவையூண் மீன் கறி, வெண்டைக்காய்கறி, தக்காளி சலட்



agaram.lk
Scanned with CamScanner

39) விற்றமின் K
40) உருளைக்கிழங்குகளை அவிக்கும் பொது
41) 40 வாரங்கள்
42) ஒக்சிரோசின், புரோலக்ரின் ஆகியன
43) ஈரலில் ஆகும்
44) தாழ்ந்த வெப்பநிலையில் மூடப்பட்ட நிலையில் குறுகிய நேரம் சமைத்தல்
45) காவிலி ஒன்றின் மீது அழுத்தியை கிடையாக வைத்தல்
46) பிரான்சிய முடிச்சு, அடுக்கு நாணயவுருத் தையல்
47) D, E
48) முண்டத்தையும் அவயங்களையும் ஒப்பிடுகையில் தலை பெரிதாகும்.
49) B, C, E
50) B, C

## மனைப்பொருளியல் - II

### பகுதி I

01)

(i)
* கூட்டுமலர் ஒழுங்கமைத்தல்
* உயரம் குறைந்த இருபக்கமும் பரவிய முறையில் ஒழுங்கமைத்தல்
* சிறிய பூக்களை மேற்புறமாகவும் பெரிய பூக்களை கீழ்ப்புறமாகவும் வைத்தல்
* பூ, இலை, கொத்தை பயன்படுத்தல்
* இள நிறப் பூக்களை மேற்புறமாகவும் கடும் நிறப் பூக்களை கீழப்புறமும் ஒழுங்கமைத்தல்
* அறையின் நிறம், தளபாடம், உபகரணங்களுக்கு பொருத்தமானதாக அமைதல்
* இடத்துக்கு ஏற்ற நிறப்பொருத்தம்
* இயற்கை அல்லது செயற்கையான மலர்கள் பயன்படுத்தல் (6 புள்ளிகள்)

(ii)
* தமது மனை வளங்களை இனங்காணல்
* வளங்கள் வரையறுக்கப்பட்டவை என்பதை விளங்கிக் கொள்ளல்
* வளங்களை வினைத்திறனுள்ள முறையில் பயன்படுத்தல்
* மாற்று வழிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் (4 புள்ளிகள்)

(iii)
* நாளாந்தம் செய்யப்படவேண்டிய வேலைகளை முதல்நாளே திட்டமிட்டு ஆயத்தம் செய்தல்
* பலவேலையை ஒரே நேரம் செய்தல்
* உழைப்பு நேரம் சிக்கனப்படுத்தும் உபகரணங்களைப் பயன்படுத்துதல்
* பொருள், கருவிகள், உபகரணங்களை உரியவாறு வைத்தல்
* வேலைப் பகிர்வு
* குறுகிய நேரத்தில் தயாரிக்கக்கூடிய உணவுகளை தயாரித்தல் (5 புள்ளிகள்)

(iv) அடிப்படைத் தையல் :- 1. பெருநூலோடல்
2. சிறுநூலோடல்
3. சோம் தையல்
4. விஸ்பத் தையல்

தையல் நுட்ப முறைகள் :- பொருத்துக்கள், திறப்புக்கள், தெறியோட்டை தைத்தல்
கொழுக்கியும் கண்ணும் தைத்தல்,
அமுக்கத் தெறி தைத்தல்,
விளிம்பு பூர்த்தி,
கழுத்து நேர்த்திகள்,
ஓரங்கள் நேர்த்தியாக்கல்

அலங்காரத் தையல்கள் :- கம்பளித் தையல்
நீள்குறுக்குத் தையல்
சங்கிலித் தையல்
நரம்புத் தையல் (5 புள்ளிகள்)


agaram.lk
Scanned with CamScanner

(v) அறையின் தன்மை
அறையின் அளவு
அறைக்கு இடப்பட்டுள்ள நிறப் பொருத்தம்
நீண்டகால பாவனை
துணியின் தன்மை, ஒளியைப் பெறக்கூடிய தன்மை
மனைத் தளபாடங்களின் தன்மை

(5 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

2) (i) உணவின் தரப்பண்பு பேணல்
உணவின் சுகாதார பாதுகாப்பைப் பேணல்
விநியோகத்தை இலகுபடுத்தல்
களஞ்சியப்படுத்தலை இலகுவாக்குதல்
நீண்டகாலம் பேணுதலில் இலகு
சந்தைப்படுத்தலில் இலகு
பயன்படுத்த இலகுவானது
சுட்டித்துண்டு மூலம் உணவில் அடங்கியவற்றை அறியலாம்.
உற்பத்திக்கு சிறந்த பூரணத்துவத்தை வழங்குதல் (5 புள்ளிகள்)

(ii) மூலதனச் செலவு மூலப்பொருட் செலவு, உழைப்புச் செலவு
மூலதனப் பொருட்கள் தேய்வடைதல், எரிபொருட்கள் செலவு
விளம்பரச் செலவு, இலாபத்தின் சதவீதம் (5 புள்ளிகள்)

(iii) பிசின்வகை (ஜெலட்டீன், தாவரப்பசை, ஜெலி, லோகட், ஈற்றுணாக்கலவை, சொசேஜ் உறை)
கனிப்பொருட்கள் (பேக்கிங் சோடமா, அப்பச் சோடா)
அசிடுலன்ஸ் (எலுமிச்சைச் சாறு, வினாகிரி)
ஈரப்பதனைக் கட்டுப்படுத்தும் பொருட்கள் (கிளிசரோல், குளுசிரப், சோபிட்டோல்)
தடிப்பாக்கிகள் (சோளமா, கோதுமைமா, சோஸ், அரருட்டுமா) (5 புள்ளிகள்)

(iv) நொதித்தல் - பருப்பு வகையின் சமிபாடு இலகுவாகும்
போசணைப் பெறுமானம் அதிகரிக்கும்
உயிர்ச்சத்து $A, B$ அளவு அதிகரிக்கும்
கிடைக்கும் அமினோ அமிலத்தின் அளவு அதிகரிக்கும்

பொங்கும் போது - அளவுப் பெறுமானம் அதிகரிக்கும்
சுவை அதிகரிக்கும்
சமிபாடு இலகுவாகும். (5 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk

03) (i)


| நார் | மீள்தன்மை | அமிலதாக்கம் | வலிமை |
|---|---|---|---|
| பருத்தி | மீள்தன்மை மிகவும் குறைவு | செறிவு குறைந்த அமிலங்களுக்கு சிறிது தாக்கு பிடிக்கும் செறிவான அமிலங்களால் தாக்கமடையும் | பலமானது உலர்ந்த நிலையிலும், ஈரமான நிலையிலும் மாற்றம் ஏற்படாது |
| கம்பளி | மீள்தன்மை காணப் படும். மீண்டும் பழைய நிலை அடையும் | தாக்குப்பிடிக்கக் கூடியது | வலிமையில் குறைந்தது |
| பட்டு | ஓரளவு இழுபடும் தன் மையுடையது | தாக்குப் பிடிக்கக் கூடியது | ஓரளவு பலமானது ஈரமான நிலையிலும், உலர்ந்த நிலையிலும் ஓரளவு பலம் குறைந்தது. |

(4 புள்ளிகள்)



Scanned with CamScanner

(ii)



(1) (2) (3) (4)

(6 புள்ளிகள்)

(iii) வேல்மடிப்பை தைத்தல்,
தோல் பொருத்துதல்
முன்பக்க திறப்பு தைத்தல்
கழுத்து தைத்தல்
பக்கப் பொருத்து தைத்தல்
கையின் கீழ் பொருத்தை தைத்தல்
கைமடிப்பு தைத்தல்
கையை உட்பகுதியுடன் பொருத்துதல்
இடையை தைத்தல்
திறப்பைப் பூரணப்படுத்துதல்

(5 புள்ளிகள்)

(iv)



பருத்தி லினன் ரேயோன்

(5 புள்ளிகள்)

04) (i) நன்மை - வேலைகளை விரைவாகச் செய்து முடிக்கலாம்.
உழைப்பைச் சிக்கனப்படுத்தலாம்.
வேலையைச் சிறப்பாகச் செய்யலாம்.
துப்பரவு செய்தல் இலகுவானது
பராமரித்தல் இலகுவானது
நேரம் மீதப்படுத்தப்படும்
மனையாள் விரைவில் களைப்படையாமல் செய்யக்கூடியதாக இருக்கும்

agaram.lk

தீமை - கூடிய பணம் செலவு
விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு
மின் பாவனை அதிகரிப்பதால் மின் கட்டணம் அதிகரிக்கும்
உடற்பயிற்சி காணப்படாமை
ஆரம்ப செலவு அதிகம்

(ii) லேஸ் வகை, நுளம்பு நெற், சுவிற்றர், கால்மேஸ், தொப்பி (பின்னல்) காலுறை

(iii) பல்தொழில்பாட்டுத் தளபாடங்கள்
கண்ணாடியுடனான அலுமாரி
இலாச்சி / இராக்கையுடனான கட்டில்
இலாச்சியுடனான கண்ணாடி மேசை
இடத்தைச் சிக்கனப்படும் மனைத் தளபாடங்கள்
தட்டுக் கட்டில்,
சுவர் அலுமாரி
மடிக்கும் கட்டில்
மடிக்கும் மேசை

(iv) முன்னாயத்தம் செய்யப்பட்ட துணியின் பிழையான பக்கத்தில் மாதிரி உருவை வைத்தல்
குண்டூசியால் இணைத்தல்
வெட்டி வேறாக்கல்
துணிக் காபணை வைத்தல் (துணியின் கீழ்)
சுவடு வரை சில்லால் வரைந்து கொள்ளல்

(5 புள்ளிகள்)



Scanned with CamScanner

05) (i) முரளியின் நாளாந்த தேவைகளைப் பொருத்தமான வேளையில் வழங்குவதில் ஆர்வம்
உரிய வயதில் தடுப்பூசி போடுதல்
சிறந்த உணவுப் பழக்கங்களில் ஈடுபடுதல்
பொருத்தமான உடற்பயிற்சியை அளித்தல்
சுத்தம் ஆரோக்கியத்தில் ஆர்வம் காட்டுதல்
நாளாந்தம் பழக்கங்களைக் கடைப்பிடித்தல்

(ii) போசணை, உண்டி விருப்பைத் தூண்டக்கூடியது
கொண்டு செல்ல இலகுவானது, உண்பதற்கு இலகு
இலகுவில் பழுதடையாத உணவுகளைத் தெரிதல்
கவர்ச்சியாகப் பொதியிடல், பதப்படுத்திய உணவுகள், சுவையூட்டிகள் தவிர்த்தல்

(iii) ஆரோக்கியமாக இருத்தல்
சுறுசுறுப்புத் தன்மை
ஒத்துழைப்புடன் செயல்படல்
திறன்களை வெளிக்காட்டல்
தைரியத்துடன் முன்வருதல்

(iv) முற்பிரசவ விருத்தி சிறப்பாக இடம் பெறுதலை அறிதல்
குருதிப் பரிசோதனை மேற்கொள்ளல்
நிறை, உயரம் அறிதல்
தாயின் போசணைக் குறைபாட்டை அறிந்து நிவர்த்தி செய்தல்

(v) உடற் சுத்தம்
உடைச் சுத்தம்
ஆரோக்கியமான உணவுகள்
தளர்வான ஆடை அணிதல்
ஓய்வும் உடற்பயிற்சியும்
குதி உயர்ந்த பாதணிகள் அணிவதைத் தவிர்த்தல் (20 புள்ளிகள்)

agaram.lk

06) (i) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
அளவீட்டு அலகுத்தரமும் சேவையும் திணைக்களம்
நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான ஆணைக்குழு
சுகாதார வைத்திய அதிகாரிகள் நிலையம்
சர்வதேச கட்டளைகள் நிறுவனம்

(ii) சுட்டியை வாசித்தல்
பொதிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல்
சாதாரண விலை மட்டங்கள் தொடர்பாக அறிவு பெறல்
களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய முறையை அறிவர்

(iii) $120^oC$ இல் 15 நிமிட நேரம் வைத்திருப்பதன் மூலம் அல்லது $148^oC$ இல் 2 - 3 செக்கன்கள் வைத்திருப்பதன் மூலம் உணவு கிருமியழிக்கப்படும்

(iv) கழுவியபின் வெட்டுதல்
பெரிய துண்டுகளாக வெட்டுதல்
குறைந்த வெப்பத்தில் குறைந்த நீரில் சமைத்தல்
உரிய பாத்திரம் பயன்படுத்தல்
சமைத்த உணவை உரிய பாத்திரத்தில் இடுதல் (20 புள்ளிகள்)



Scanned with CamScanner

07) (i) காபோவைதரேற்று - வாயில்
புரதம் - இரைப்பையில்
கொழுப்பு - முன்சிறுகுடலில்

(ii) சதையச்சாற்றில் காணப்படும் நொதியங்கள்
திரிச்சின், சதைய அமிலேசு, சதைய இலிப்பேசு

(iii) மாணவர் விடை

(iv) மலம் உலர்ந்து போவதன் விளைவாக மலம் கழித்தல் கடினமானதாக அமையும் நிலையே மலச்சிக்கல் எனப்படும்.

(20 புள்ளிகள்)

08) (i)

காபோவைதரேற்று

- ஒருசக்கரைட்டு → குளுக்கோசு → பிறைக்ரோசு → கலைக்ரோசு
- இருசக்கரைட்டு → மோற்றோசு → சுக்குரோசு → இலக்ரோசு
- பல்சக்கரைட்டு → மாப்பொருள் → கிளைக்கோஜன் → செலிலோசு → பெக்டின் → பசை

(ii) மாணவர் விடை

(iii) மாணவர் விடை

(iv) செய்தித்தாள்கள்
வானொலி
தொலைக்காட்சி
சினிமா
சிறுவருக்கான திரைப்படங்கள்

agaram.lk

(20 புள்ளிகள்)

09) (i) திண்மக் கழிவுகள்
திரவக் கழிவுகள்
வாயுக்கழிவுகள்

(ii) குவியல் முறை
உருளை முறை
குழி முறை
குவியல் முறை

(iii) மாணவர் விடை

(20 புள்ளிகள்)



Scanned with CamScanner